| O.S.No. 182/2019 | DW2: திரு. இளங்கோவன்<br>த/பெ. திரு. நாராயணசாமி | 10-11-2025 |
| --- | --- | --- |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் அக்கப்பநாயுடுவின் பேரன். அக்கப்பாநாயுடுவின் மனைவி ஜெகதாம்பாள். அவர்களுக்கு ஆண் வாரிசுகள் இல்லை, பெண் வாரிசுகள்தான். சரோஜினியம்மாள் மூத்த மகள், சகுந்தலா அம்மாள் இளைய மகள் ஆவார். சரோஜியம்மாளின் கணவர் நாராயணசாமி நாயுடு. சரோஜினியம்மாளுக்கு 4 பெண்கள், 2 மகன்கள் வாரிசுகள் ஆகும். அவர்கள் பெயர் தமிழரசி, தில்லைக்கரசி, எழிலரசி, சாந்தி ஆகும். காசி மற்றும் நான் மகன்கள் ஆகும். சகுந்தலா அம்மாளின் கணவர் பெயர் ராஜகண்ண நாயுடு. மேற்படியாருக்கு வாதி, ராமமூர்த்தி, பண்டிட் விஜயலட்சுமி, ஞானாம்பாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆகும்.

2. அக்கப்ப நாயுடு 1997–ல் காலமானார். அவரது மனைவி ஜெகதாம்பாள் அக்கப்பநாயுடு இறப்பதற்கு முன்னரே 1977–ல் காலமானார். எனது தாயார் சரோஜினியம்மாள் 2017–ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தாயாருடன் பிறந்த சகுந்தலா அம்மாள் 2008–ல் இறந்துவிட்டார். எனது சகோதரர் காசி 2012–ல் இறந்துவிட்டார். சகுந்தலா அம்மாளின் குமாரர் ராமமூர்த்தி 1994–ல் இறந்துவிட்டார்.

3. 1–ம் பிரதிவாதி ராஜி (எ) குருசாமி ஏற்கனவே செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. எண். 43/2021 என்ற வழக்கினை தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நான் அவருக்காக சாட்சியம் அளித்தேன். அந்த வழக்கு விசாரணை முடிந்ததற்கு பிறகு அதனை வாதி வாபஸ் பெற்றுக்கொண்டார். 1–ம் பிரதிவாதி ஜெகதாம்பாள் சொத்தினை என் தாயாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

4. ஜெகதாம்பாளுக்கு சொந்தமான சொத்து அகத்தேரிப்பட்டு எல்லையில் உள்ளது. மேற்படி சொத்தினை ஜெகதாம்பாள் வரதப்ப நாயுடு, கோபால் நாயுடு ஆகியோர்களிடமிருந்து இரு கிரைய பத்திரங்கள் மூலமாக கிரையம் பெற்றார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜெகதாம்பாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஜெகதாம்பாளின் வாரிசுகள் அவரது கணவர் அக்கப்ப நாயுடு, மகள்கள் சரோஜினியம்மாள், சகுந்தலா அம்மாள் என்றால் சரிதான். அதனால், ஜெகதாம்பாளின் சொத்துக்களில் மேற்படி மூவருக்கும் தலா 3-ல் பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் இல்லை. ஜெகதாம்பாளின் வாரிசு அக்கப்பநாயுடு இல்லை, சரோஜினியம்மாள், சகுந்தலா அம்மாள் மட்டுமே ஜெகதாம்பாளுக்கு வாரிசுகள் ஆவார்கள்.

5. அக்கப்பாநாயுடுவும் ஜெகதாம்பாளின் ஒரு வாரிசு என்றாலும், அவருக்கு சொத்துக்களில் 3-ல் 1 பாகம் உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. எனது தாயார் ராஜி (எ) குருசாமிக்கு ஜெகதாம்பாளின் சொத்துக்களில் பொதுவில் பாதி பாகத்தினை கிரையம் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். எனது தாயாருக்கு கிரையம் செய்து கொடுக்க 3-ல் 1 பாகம்தான் உரிமை உள்ளது என்றாலும், பொதுவில் பாதி பாகத்தினை கிரையம் செய்து கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் அது தவறு.

6. அக்கப்பநாயுடு உயிரோடு இருக்கும்போது எனது சகோதரிகளான தமிழரசி, தில்லைக்கரசிக்கு 10.07.1995-ல் விண்ணமங்கலம் எல்லையில் உள்ள 3 ஏக்கர் 52 செண்ட்டினை தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரிதான். அதேபோல் என்னுடைய

சகோதரிகள் சாந்தி, எழிலரசிக்கு 14.07.1995-ல் அதே விண்ணமங்கலம் கிராமத்தில் 3 ஏக்கர் 52 செண்ட்டினை தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மின் இணைப்பு மற்றும் மின் மோட்டார், கிணறு கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரப்படி தமிழரசி, தில்லைக்கரசி சொத்துக்களை அனுபவித்து வந்து செங்கம்பூண்டி கிராமத்தை சேர்ந்த முத்து கவுண்டர் என்பவருக்கு 2000-ம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதேபோல் எழிலரசி, சாந்தியும் அனுபவித்து வந்த சொத்துக்களை அதே முத்துகவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

8. அதேபோல் 20.08.1993-ல் மாளிமைப்பட்டு கிராமத்தில் உள்ள சொத்தினையும், விண்ணமங்கலம் கிராமத்தில் உள்ள சொத்தினையும் ராமமூர்த்தி மற்றும் வாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் அக்கப்பநாயுடு எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 17.08.1993-ல் அக்கப்ப நாயுடு ராமமூர்த்தி, செல்வராஜ் ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் மூலமாக சில சொத்துக்களை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல, அது போலியான ஆவணம் ஆகும். நான் அந்த ஆவணத்தை வாங்கி பார்த்தேன், அதில் உள்ள கையெழுத்து அக்கப்பநாயுடுவின் கையெழுத்து இல்லை.

9. ஏற்கனவே, நான் செய்யாறு மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தினை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்தேன் என்றால் அவ்வாறு அளிக்கவில்லை. வாதியின் சகோதரர் ராமமூர்த்தி 1994-ல் திருமணம்

ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1993 தான செட்டில்மெண்ட் பத்திரப்படி சொத்தினை அனுபவித்து வந்த வாதி அச்சொத்தினை செங்கம்பூண்டி கிராமத்தை சேர்ந்த பூங்காவண கவுண்டருக்கு 3 ஏக்கர் 98 செண்ட்டினை கிரையம் கொடுத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களுக்கான பட்டா வாதி செல்வராஜ் பெயரில் உள்ளது என்றால் என் தாத்தா பெயரில் இருந்தது, தற்போது செல்வராஜ் அவர் பெயர் ஏமாற்றி மாற்றிக்கொண்டார்.

10. அதேபோல், 17.08.1993-ல் அக்கப்பநாயுடு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் படி வாதி அவரது சகோதரருக்கு எழுதி வைத்தத தான செட்டில்மெண்ட் படி அச்சொத்தினை வாதி அடைந்து அனுபவித்து வந்து பின்னர் பூங்காவன கவுண்டருக்கு 3 ஏக்கர் 49 செண்ட்டினை வாதி கிரையம் கொடுத்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது, அக்கப்பநாயுடுவிடம் மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் அடித்து துன்புறுத்தி வாங்கப்பட்டது. 07.12.1990-ல் பண்டிட் விஜயலட்சுமிக்கு அக்கப்ப நாயுடு விண்ணமங்கலம் எல்லையில் உள்ள சொத்தில் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல, அந்த ஆவணமும் அக்கப்பநாயுடுவை அடித்து துன்புறுத்தி எழுதி பெறப்பட்டது. 26.12.1995-ல் அக்கப்பநாயுடு மேல்குவளை கிராமத்தில் உள்ள சொத்தை பொறுத்து ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல, அந்த ஆவணமும் அக்கப்பநாயுடுவை அடித்து துன்புறுத்தி எழுதி பெறப்பட்டது.

11. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் முதல் மகளின் வாரிசுகளுக்கு எவ்வாறு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தாரோ அதன்படிக்கே 2-வது மகளின் வாரிசுகளுக்கும் எழுதி

கொடுக்கப்பட்டது என்றாலும், அந்த தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் அக்கப்பநாயுடுவை அடித்து துன்புறுத்தி எழுதி வாங்கப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றாலும் சரியல்ல. அக்கப்பநாயுடு உயிருடன் இருந்த வரையில் மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் அடித்து துன்புறுத்தி வாங்கப்பட்டது என்று ரத்து பத்திரம் எதுவும் எழுதவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல், அக்கப்பநாயுடு மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லாது என்று சொல்லி நீதிமன்றத்தின் மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால், அக்கப்பநாயுடு எழுதி வைத்த மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படி செல்லும் என்றாலும், அந்த ஆவணங்கள் சரோஜினியம்மாளையும், அவரது வாரிசுகளையும் கட்டுப்படுத்தும் என்றாலும் சரியல்ல.

12. அக்கப்பநாயுடு தன்னுடைய முதல் மகளுக்கும், இரண்டாவது மகளுக்கும் எழுதி கொடுத்தது போக, மீதம் உள்ள சொத்துக்களை பொறுத்து 1994ம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல, அது போலியான ஆவணம் ஆகும். அந்த உயில் சாசனத்தை அதே ஆண்டு டிசம்பர் மாதம் அக்கப்பநாயுடு ரத்து செய்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி உயில் சாசனத்தை ரத்து செய்துவிட்டு 29.12.1996-ல் மீண்டும் ஒரு உயில் சாசனத்தை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல, அது போலியான ஆவணம் ஆகும்.

13. மேற்படி உயில் மற்றும் ரத்து செய்யப்பட்ட உயில் ஆவணங்களை வாங்கி பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். முதல் மற்றும் இரண்டாவதாக எழுதி வைத்த உயில் சாசனங்களில் A ஷெட்யூல்

சொத்துக்களை சரோஜினியம்மாளும், B ஷெட்யூல் சொத்துக்களை சகுந்தலா அம்மாளும் அடைய வேண்டும் என்று வாசகம் கண்டு எழுதி வைத்தார் என்றால் சரிதான். A ஷெட்யூல் சொத்தினை சரோஜினியம்மாள் காலாந்திரம் வரை அனுபவித்து வந்து அவருக்கு பிறகு அவரது மகன் காசி (எ) குப்பன் அடைய வேண்டும் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அக்கப்பநாயுடு இறந்த பிறகு அவர் கடைசியாக எழுதி வைத்த உயில் சாசனம் ஆச்சாரத்திற்கு வந்து அந்த உயில் சானத்தில் கண்டுள்ள A ஷெட்யூல் சொத்தினை எனது தாயார் அனுபவித்து வந்தார் என்றால் எனது தாயார்தான் மொத்த சொத்துக்களையும் அனுபவித்து வந்தார்.

14. எனது சகோதரர் காசி (எ) குப்பன் இறந்துவிட்டதால் எனது தாயார் 05.05.2014 அன்று பரையம்பாடி கிராமத்தை சேர்ந்த சந்திரன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை நான் உடன் இருந்து எழுதி கொடுத்தேன். அந்த கிரைய பத்திரத்தில் எனது தாயார் அவரது தந்தை உயில் சாசனமாக எழுதி வைத்த சொத்து என்று குறிப்பிட்டு வாசகம் கண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான்.

15. உயில் சானத்தில் B ஷெட்யூல் சொத்துக்களை சகுந்தலா அம்மாள் அனுபவித்து வந்து எவ்வித பாராதீனமும் செய்யாமல் அவரது காலாந்திரத்திற்கு பிறகு அவரது குமாரர் வாதி செல்வராஜ் அடையவேண்டும் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். சகுந்தலா அம்மாள் இறந்த பிறகு சகுந்தலா அம்மாள் அனுபவித்து வந்த சொத்துக்கள் குறித்து வாதி அவரது பெயரில் பட்டா மாற்றம் செய்து கொண்டார் என்று சொன்னால் அது போலியான பட்டா ஆகும். அக்கப்ப

நாயுடு உயிரோடு இருந்த வரையில் உயில் சாசனம் ரத்து சம்மந்தமாக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. வாதி தாக்கல் செய்த வழக்கினை படித்து பார்த்தேன். வாதி, வாதியின் தாயாருக்கு உயில் சாசனம் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களையும், தனக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களையும் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

16. ஜெகதாம்பாளுடைய சொத்தில் 3-ல் 1 பாகம் அக்கப்பநாயுடுவுக்கு உரிமை உள்ளது என்பதால், தன்னுடைய இளைய குமாரத்தி சகுந்தலா அம்மாள் பெயரில் எழுதி வைத்த உயில் சாசனத்தில் அவருடைய காலாந்திரத்திற்கு பிறகு சகுந்தலா அம்மாள் அடைய வேண்டும் என்றும், அவரது காலாந்திரத்திற்கு பிறகு வாதி அடைய வேண்டும் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என் தாத்தா எழுதிய உயில் சாசனங்கள் மற்றும் தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் குறித்த அனைத்து விஷயங்களும் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது வழக்கிற்காக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

17. எனது தாயாருக்கு ஜெகதாம்பாள் சொத்தில் விற்பனை செய்வதற்கு 3-ல் 1 பாகம் மட்டுமே உரிமை உள்ளது என்றாலும், பொதுவில் பாதி பாகத்தை கிரையம் செய்து கொடுத்தது சட்டப்படி செல்லாது என்றாலும், அது வாதியை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும், வாதியை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை

என்றாலும், வாதியின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

18. நான் சென்னையில் வசித்து சேம்பரில் சூப்பர்வைசராக வேலை செய்கிறேன். எனது தாயார் உயிருடன் இருந்த காலம் வரையில் அக்கப்பநாயுடு உயில் சாசனம் எழுதி வைக்கவில்லை என்று சொல்லி எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல், எனது தாயார் எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 1-ம் பிரதிவாதிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.10 12:25:23 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**